21.08.2025 SC.55/2017

சாட்சி : PW.5 வாசுதேவன்.

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. முருகேசன் மற்றும் செல்வி எனக்கு ஒரு 20 ஆண்டுகளாக தெரியும். காலையில் 05.30 மணிக்கு எதற்காகச் சென்றேன் என்றால் அவர்கள் இடத்தை பற்றி விசாரிப்பதற்காக சென்றேன். குடிசை எரிந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து நான் எவ்வளவு தூரத்தில் இருந்தேன் என்றால் நான் சம்பவ இடத்தின் அருகில் தான் இருந்தேன். அந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே யார் யார் இருந்தனர் என்றால் மனோகரன் இருந்தார், நான் அவரை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் அந்த இடத்திற்கு போவதற்கு முன்பாகவே கூரைகள் எரிந்து கொண்டிருந்ததா அல்லது நான் போன பின்பு எரிந்ததா என்றால் நான் போவதற்கு முன்பே எரிந்து கொண்டிருந்தது, சுமார் எத்தனை மணி அளவு இருக்கும் என்றால் காலை 6, 06.30 மணியளவு இருக்கும்.

2. முருகேசன் மற்றும் செல்வி எனக்கு உறவினரா என்றால் இல்லை. என் முகவரிக்கும் முருகேசன், செல்வி இடத்திற்கும் இடைய எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். பக்கத்து வீட்டுகாரர் என்று நான் சொல்லியுள்ளவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது, அவரை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று சொன்னால்வ சரியல்ல, அ.சா.1, 2 கேட்டுகொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

21.08.2025 SC.55/2017

சாட்சி : PW.7 இராமநாதன்.

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

அ.சா.1 என் மகள் என்றால் சரிதான். அவர் தகவல் சொல்லியதன் அடிப்படையில் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை, ஆனால் அவர்கள் என்னிடம் இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததற்கு தயார் செய்ததாக சொன்னார்கள். அ.சா.1 என் மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் மகள் செல்விக்கும், எதிரிக்கும் இடையே உரிமையியல் வழக்கு உள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கையொப்பம் இட்டதாக சொல்லப்படும் தேதி, நேரம் ஞாபகம் உள்ளதா என்றால் 2015 ம் வருடம் சுமார் 11 முதல் 11.30 மணி இருக்கும், தேதி சரியாக ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.